# திண்ணை பயிற்சிப்பட்டறை - தேனி

# TNPSC GROUP I, II, IIA, IV - 2023

19th Batch

Test - 8

Mobile: 93614 82208, 99409 70325 Email id: thinnaimail@gmail.com

## திண்ணை உறுதிமொழி

இரக்கமும் கருணையும் இருகண்களாகட்டும்!
இதழ்கள் இரண்டிலும் புன்னகை மலரட்டும்!
உழைப்பும், உறுதியும் இருதோள்களாகட்டும்!
நேர்மை ஒன்றையே நெஞ்சம் தாங்கட்டும்!
இடதும் வலதும் இணைந்த கரங்களாகட்டும்!
இதயம் என்றும் அன்பால் துடிக்கட்டும்!
தடைகளைத் தாண்டி கால்கள் ஓடட்டும்!
கொட்டும் வியர்வையே மூலதனமாகட்டும்!
சாதி, மதம் பேதம் ஒழிப்போம்!
பதவி பணம் தரும் கர்வம் தவிர்ப்போம்!
லட்சியம் விதைத்து வெற்றியை அடைந்து!
லஞ்சம் தவிர்த்து நெஞ்சை நிமிர்த்து!
அறத்தின் வழிநின்று மனிதம் போற்று!!

1. வல்லினம் மிகா இடங்கள் தொடர்பான பின்வரும் கூற்றுகளை கவனி?
   1. அது, இது, எது ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகாது. எ.கா. அது சென்றது, இது பெரியது, எது கிடைத்தது.
   2. இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ வெளிப்படையாக வரும் இடங்களில் வல்லினம் மிகாது. எ.கா. தலையை காட்டு.
   3. பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம் ஆகியவற்றை அடுத்து வல்லினம் மிகாது. எ.கா. எழுதிய பாடல், எழுதாத பாடல்.

   A. கூற்று 1, 3 மட்டும் சரி B. கூற்று 2, 3 மட்டும் சரி C. கூற்று 1, 2 மட்டும் சரி
   D. கூற்று 1, 2, 3 சரி E. விடை தெரியவில்லை
2. அன்னம் விடு தூது என்ற இதழை நடத்தியவர் யார்?
   A. புதுமைப்பித்தன் B. மு.மேத்தா C. மீரா D. கோமகள் E. விடை தெரியவில்லை
3. அம்பேத்கரின் ‘இந்தியாவின் தேசியப்பங்கு வீதம்’ என்ற ஆய்வுக்காக எந்த பல்கலைக்கழகம் அவருக்கு முனைவர் பட்டம் வழங்கியது?
   A. மும்பை பல்கலைக்கழகம் B. அமெரிக்கப் பல்கலைக்கழகம்
   C. கொலம்பியா பல்கலைக்கழகம் D. இங்கிலாந்து பல்கலைக்கழகம் E. விடை தெரியவில்லை
4. ஒருமை, பன்மை அறிந்து தவறான தொடரைத் தேர்க.
   A. சிறுமி தனது கையில் மலர்களை வைத்திருந்தாள்.
   B. உயர்ந்தோர் தன்னைத் தானே புகழ்ந்துகொள்ள மாட்டார்கள்.
   C. இவை தாம் எனக்குப் பிடித்த நூல்கள்.
   D. குழந்தைள் தம்மால் இயன்ற உதவிகளைப் பிறருக்கு செய்கின்றனர்.
   E. விடை தெரியவில்லை
5. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க.
   1. பால் மனம் எனும் கதை கோமகள் தொகுத்த மீதமிருக்கும் சொற்கள் எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.
   2. விடுதலைத் திருநாள் எனும் கவிதை கோடையும் வசந்தமும் எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

   A. 1, 2 சரி B. 1 மட்டும் சரி C. 2 மட்டும் சரி D. 1, 2 தவறு E. விடை தெரியவில்லை
6. கப்பல்கள் பழுதடையாமல் நெடுங்காலம் உழைப்பதற்காக அதில் சுண்ணாம்பையும் சணலையும் கலந்து அரைத்து அதில் எண்ணெய் கலந்து கப்பலின் அடியில் பூசிய செய்தியை வியந்து பாராட்டிய கடற்பயணி
   A. மார்க்கோபோலோ B. பாகியான் C. யுவான் சுவாங் D. நிகோலோ கோண்டி
   E. விடை தெரியவில்லை
7. பொருத்துக. (ஓரெழுத்து ஒருமொழி)
   a. கூ - 1. இளமை
   b. கை - 2. கடவுள்
   c. தே - 3. பூமி
   d. பை - 4. ஒழுக்கம்

   A. 1 2 3 4 B. 4 3 2 1 C. 3 4 2 1 D. 2 1 4 3 E. விடை தெரியவில்லை
8. “வெள்ளத்தால் அழியாது வெந்தணலால்
   வேகாது வேந்தராலும்” என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல்
   A. நாலடியார் B. தனிப்பாடல் திரட்டு C. பட்டினப்பாலை D. நான்மணிக்கடிகை
   E. விடை தெரியவில்லை
9. பொருத்துக.
   a. ஆல் - 1. தோகை
   b. கோரை - 2. கூந்தல்
   c. நாணல் - 3. இலை
   d. கமுகு - 4. புல்

   A. 1 2 3 4 B. 4 3 2 1 C. 3 4 1 2 D. 3 4 2 1 E. விடை தெரியவில்லை

10. நின்றவர் கண்டு நடுங்கினாரே - ஐயன்
நேரிலே நிற்கவும் அஞ்சினாரே - என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல்?
A. ஆசிய ஜோதி B. பராபரக்கண்ணி C. எங்கள் கிழக்கு D. புதுமைகள் செய்யும் தேசமிது
E. விடை தெரியவில்லை

11. பொருத்துக.
a. தூற்றும் படி - 1. அறிஞர்கள்
b. மூத்தோர் - 2. வழி
c. மேதைகள் - 3. இகழும்படி
d. நெறி - 4. பெரியோர்
A. 1 2 3 4 B. 2 1 4 3 C. 3 4 2 1 D. 3 4 1 2 E. விடை தெரியவில்லை

12. யாப்பு இலக்கணம் தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கவனி?
1. குறிப்பிட்ட வடிவத்தில் இலக்கணத்திற்கு உட்பட்டு எழுதப்படும் கவிதைகளை மரபுக்கவிதைகள் என்பர்.
2. மரபுக்கவிதைகளை எழுதுவதற்கான இலக்கணம் யாப்பு இலக்கணம் என அழைக்கப்படுகிறது.
3. யாப்பு இலக்கணத்தின்படி செய்யுளுக்கு உரிய உறுப்புகள் ஆறு ஆகும். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை.
A. கூற்று 1, 3 மட்டும் சரி B. கூற்று 2, 3 மட்டும் சரி C. கூற்று 1, 2 மட்டும் சரி
D. கூற்று 1, 2, 3 சரி E. விடை தெரியவில்லை

13. அயோத்திதாசர் பதிப்பித்த நூல்களில் பொருத்தமற்றது எது?
A. புத்தரது ஆதிவேதம் B. போகர் எழுநூறு C. அகத்தியர் இருநூறு
D. சிமிட்டு இரத்தினச் சுருக்கம் E. விடை தெரியவில்லை

14. கலிங்கத்துப்பரணி தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கவனி?
1. தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பரணி வகையைச் சார்ந்த நூல்.
2. தமிழில் முதன் முதலில் எழுந்த பரணி கலிங்கத்துப்பரணி ஆகும்.
3. இரண்டாம் குலோத்துங்க சோழன், கருணாகரத் தொண்டைமான் ஆகியோரின் கலிங்கப்போர் வெற்றிகள் பற்றிக் கூறுகிறது.
A. கூற்று 1, 2 மட்டும் சரி B. கூற்று 2, 3 மட்டும் சரி C. கூற்று 1, 3 மட்டும் சரி
D. கூற்று 1, 2, 3 சரி E. விடை தெரியவில்லை

15. சரியானதைத் தேர்ந்தெடு.
A. திசம்பர் சூடினாள் - காலவாகு பெயர் B. தலைக்கு ஒரு பழம் கொடு - தொழிலாகு பெயர்
C. பொங்கல் உண்டான் - பண்பாகு பெயர் D. மல்லிகை சூடினாள் - இடவாகு பெயர்
E. விடை தெரியவில்லை

16. காயிதே மில்லத் என்னும் அரபுச் சொல்லுக்கு .................... என்பது பொருள்.
A. உலகத்தின் வழிகாட்டி B. சமுதாய வழிகாட்டி C. சிந்தனையாளர் D. சட்ட வல்லுநர்
E. விடை தெரியவில்லை

17. பொருத்துக.
a. நாகரிகம் - 1. Irrigation
b. நீர்ப்பாசனம் - 2. Civilization
c. நெற்பயிர் - 3. Agronomy
d. உழவியல் - 4. Paddy
A. 2 1 3 4 B. 2 1 4 3 C. 4 3 2 1 D. 3 4 1 2 E. விடை தெரியவில்லை

18. மதுரைத் தமிழ்ச் சங்கம் பற்றிய கூற்றுகளில் சரியானதைத் தேர்ந்தெடு.
1) மதுரை மாநகரின் தல்லாக்குளம் பகுதியில் அமைந்துள்ளது.
2) சுமார் எண்பத்தேழாயிரம் சதுரஅடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது.
3) இக்கட்டடம் 2014ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது.
4) இதன் வெளிப்புற சுற்றுச் சுவற்றில் 1330 குறட்பாக்கள் இடம் பெற்றுள்ளன.
A. 1, 2, 4 சரி 3 தவறு B. 1, 2, 3 சரி 4 தவறு C. 1, 2 சரி 3, 4 தவறு
D. 1, 2 தவறு 3, 4 சரி E. விடை தெரியவில்லை

19. பொருத்துக.
    a. ஓட்டம் - 1. முதனிலை திரிந்த தொழிற்பெயர்
    b. பிடி - 2. முதனிலை தொழிற்பெயர்
    c. சூடு - 3. விகுதி பெற்ற தொழிற்பெயர்
    A. 1 2 3 B. 3 2 1 C. 1 3 2 D. 2 1 3 E. விடை தெரியவில்லை
20. பின்வரும் கூற்றுகளை ஆராய்க.
    கூற்று 1 : மனிதர்கள் வீடுகட்டி வாழத்தொடங்கிய காலம் முதல் வரைந்த ஓவியங்கள் சுவர் ஓவியங்கள் எனப்படும்.
    கூற்று 2 : சித்தன்னவாசல் என்னும் இடங்களில் இந்த ஓவியங்கள் காணப்படுகின்றன.
    A. கூற்று 1 (ம) 2 சரி B. கூற்று 1 (ம) 2 தவறு C. கூற்று 1 சரி 2 தவறு
    D. கூற்று 1 தவறு 2 சரி E. விடை தெரியவில்லை
21. 'தமிழ் மொழியின் உபநிடதம்' என அழைக்கப்படுவது எது?
    A. சிலப்பதிகாரம் B. மணிமேகலை C. தாயுமானவர் பாடல்கள் D. திருக்குறள்
    E. விடை தெரியவில்லை
22. அனைத்துவகை போட்டித் தேர்வுகளுக்கும் தேவையான நூல்கள் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் எந்த தளத்தில் உள்ளது?
    A. ஐந்து B. ஏழு C. ஆறு D. எட்டு E. விடை தெரியவில்லை
23. தவறானதைத் தேர்ந்தெடு. (தாராபாரதி)
    A. இயற்பெயர் : இராதாகிருஷ்ணன்
    B. அடைமொழி பெயர் : மொழி ஞாயிறு
    C. நூல்கள் : புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, விரல்நுனி வெளிச்சங்கள்
    D. எதுவுமில்லை
    E. விடை தெரியவில்லை
24. கலிங்கத்துப்பரணியை தென்தமிழ்த் தெய்வப்பரணி என அழைத்தவர் யார்?
    A. பலபட்டடைச் சொக்கநாதர் B. செயங்கொண்டார் C. ஒட்டக்கூத்தர்
    D. கருணாகரத் தொண்டைமான் E. விடை தெரியவில்லை
25. அயோத்திதாசரின் இதழ்ப்பணி தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கவனி?
    1. ஒரு பைசாத் தமிழன் என்ற தனது இதழின் பெயரை தமிழன் என பெயர் மாற்றினார்.
    2. தமிழன் இதழ் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டும் இன உணர்வு, பகுத்தறிவுச் சிந்தனையை ஊட்டினார்.
    3. தமிழன் இதழின் நோக்கம் - உயர்நிலை, இடைநிலை, கடைநிலையை பாகுப்படுத்தி அறியமுடியாத மக்களுக்கு நீதி, நேர்மை, சரியான பாதை ஆகியவற்றை தெளிவுபடுத்துதல்
    A. கூற்று 1, 3 மட்டும் சரி B. கூற்று 2, 3 மட்டும் சரி C. கூற்று 1, 2 மட்டும் சரி
    D. கூற்று 1, 2, 3 சரி E. விடை தெரியவில்லை
26. பொருத்துக.
    a. மறலி - 1. புதர்
    b. கரி - 2. தமிழர்
    c. தூறு - 3. காலன்
    d. அருவர் - 4. யானை
    A. 3 4 1 2 B. 2 1 4 3 C. 3 1 4 2 D. 4 1 2 3 E. விடை தெரியவில்லை
27. பொருத்துக.
    a. இயற்கைத் தவம் - 1. சீவக சிந்தாமணி
    b. இயற்கை அன்பு - 2. பெரிய புராணம்
    c. இயற்கை வாழ்வில்லம் - 3. திருக்குறள்
    d. இயற்கை இன்பக்கலம் - 4. கலித்தொகை
    A. 1 2 3 4 B. 2 1 4 3 C. 3 2 1 4 D. 4 3 2 1 E. விடை தெரியவில்லை

28. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ..................
A. பாரதிதாசன் B. வ.உ.சிதம்பரனார் C. பெருஞ்சித்திரனார் D. தந்தை பெரியார்
E. விடை தெரியவில்லை

29. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க.
1) இந்திய அரசு எம்.ஜி.ஆர் -க்கு இந்திய மாமணி விருதினை 1988 ஆம் ஆண்டு வழங்கியது.
2) இந்திய அரசு அம்பேத்கருக்கு, பாரத ரத்னா விருதினை 1990 ஆம் ஆண்டு வழங்கியது.
A. 1, 2 சரி B. 1 மட்டும் சரி C. 2 மட்டும் சரி D. 1, 2 தவறு E. விடை தெரியவில்லை

30. பொருத்துக.
a. குழி - 1. நீட்டல் அளவைப்பெயர்
b. சாண் - 2. நில அளவைப்பெயர்
c. மணி - 3. உதிர்தல்
d. கழலுதல் - 4. முற்றிய நெல்
A. 2 1 3 4 B. 2 1 4 3 C. 1 2 3 4 D. 4 3 2 1 E. விடை தெரியவில்லை

31. பின்வரும் கூற்றுகளைக் கவனி.
கூற்று 1 : ஐரோப்பிய கலை நுணுக்கத்துடன் இந்தியக் கலை மரபுகளை இணைத்து ஓவியங்களில் புதுமைகளைப் புகுத்தியவர் கொண்டையராஜு.
கூற்று 2 : நாட்காட்டி ஓவியம் வரையும் முறையின் முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர் இராஜா ரவிவர்மா.
A. கூற்று 1 (ம) 2 சரி B. கூற்று 1 (ம) 2 தவறு C. கூற்று 1 சரி 2 தவறு
D. கூற்று 1 தவறு 2 சரி E. விடை தெரியவில்லை

32. பொருத்துக.
a. பழம் - 1. இடுகுறிப் பொதுப்பெயர்
b. வாழை - 2. இடுகுறிச் சிறப்புப்பெயர்
c. மரங்கொத்தி - 3. காரணச் சிறப்புப்பெயர்
d. அணி - 4. காரணப் பொதுப்பெயர்
A. 1 2 3 4 B. 3 2 1 4 C. 3 2 4 1 D. 2 1 3 4 E. விடை தெரியவில்லை

33. பொருத்துக.
a. பொருட்பெயர் - 1. படித்தல்
b. இடப்பெயர் - 2. கிளை
c. சினைப்பெயர் - 3. தெரு
d. தொழிற்பெயர் - 4. பறவை
A. 4 3 2 1 B. 4 3 1 2 C. 1 2 3 4 D. 2 1 3 4 E. விடை தெரியவில்லை

34. வாழும் உயிரை வாங்கிவிடல் - இந்த
மண்ணில் எவர்க்கும் எளிதாகும்;
வீழும் உடலை எழுப்புதலோ - ஒரு
வேந்தன் நினைக்கிலும் ஆகாதையா! - இத்தொடர் யாருடையது?
A. முடியரசன் B. நாமக்கல் கவிஞர் C. கவிமணி D. கண்ணதாசன் E. விடை தெரியவில்லை

35. ‘கல்விக் கண் திறந்தவர்’ என காமராசரை மனதாரப் பாராட்டியவர் யார்?
A. காந்தி B. திரு.வி.க C. நேதாஜி D. பெரியார் E. விடை தெரியவில்லை

36. பொருத்துக.
a. நித்தம் நித்தம் - 1. உலகம்
b. மட்டு - 2. நன்கு
c. சுண்ட - 3. அளவு
d. வையம் - 4. நாள்தோறும்
A. 2 1 4 3 B. 2 4 1 3 C. 4 2 1 3 D. 4 3 2 1 E. விடை தெரியவில்லை

37. ரங்கராஜன் எழுதிய நூல்களில் பொருந்தமற்றது எது?
A. என் இனிய எந்திரா B. தூண்டில் மீன்கள் C. மீண்டும் ஜீனோ D. ஸ்ரீரங்கத்து தேவதைகள்
E. விடை தெரியவில்லை

38. போர்தற்கு அரும்பிணி தாம்இவை அப்பிணி
தீர்தற்கு உரிய திரியோக மருந்துஇவை - என்ற அடி இடம்பெற்ற சருக்கம்
A. குண்டலகேசி வாதம் சருக்கம் B. புத்த வாதம் சருக்கம் C. தருமவுரைச் சருக்கம்
D. வேத வாதம் சருக்கம் E. விடை தெரியவில்லை

39. ஒருவனுக்கு சாகும் அளவுக்கு துன்பம் தருவது எது?
A. தாம் செய்யப்போகும் செயல் பிழை என்று தெரிந்தும் செய்வது.
B. சான்றோரை மதியாமல் செய்யும் செயல்கள்.
C. நற்பண்பு இல்லாதவன் செய்யும் தீமையான செயல்கள்.
D. மீண்டும் மீண்டும் ஆராய்ந்து பாராமல் ஒருவனுடன் கொண்ட நட்பு.
E. விடை தெரியவில்லை

40. "பொன்னகரம்" என்னும் சிறுகதையின் ஆசிரியர் யார்?
A. புதுமைப்பித்தன் B. இறையரசன் C. சே.சேசுராசா D. B&C E. விடை தெரியவில்லை

41. 'ஒன்றாகு முன்றிலோ இல்' என்பதன் பொருள்
A. ஒன்றுமில்லாத வீடு எதுவுமில்லை B. ஒன்றுமில்லாத வீடுகள் இருக்கிறது
C. ஒன்றுமில்லாத கடை ஒன்றுமில்லை D. ஒன்றுமில்லாத தெரு எதுவுமில்லை
E. விடை தெரியவில்லை

42. கூற்று 1 : திருநெல்வேலியும், பாளையங்கோட்டையும் இரட்டை நகரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
கூற்று 2 : தாமிரபரணி ஆற்றின் மேற்குக் கரையில் திருநெல்வேலியும், கிழக்குக் கரையில் பாளையங்கோட்டையும் அமைந்துள்ளன.
A. கூற்று 1, 2 சரி B. கூற்று 1 சரி, 2 தவறு C. கூற்று 1, 2 தவறு D. கூற்று 1 தவறு, 2 சரி
E. விடை தெரியவில்லை

43. பொருத்துக.
a. டெபிட் கார்டு - 1. இ வணிகம்
b. கிரெடிட் கார்டு - 2. பற்று அட்டை
c. ஆன்லைன் ஷாப்பிங் - 3. கடன் அட்டை
d. ஈ-காமர்ஸ் - 4. இணையவழி வணிகம்
A. 1 2 3 4 B. 2 3 1 4 C. 2 3 4 1 D. 3 4 1 2 E. விடை தெரியவில்லை

44. குழந்தைகளைத் தொழிலாளர்களாக மாற்றுவது மனிதத் தன்மைக்கு எதிரான குற்றம். உலகத்தைக் குழந்தைகளின் கண் கொண்டு பாருங்கள். உலகம் அழகானது எனக் கூறியவர்?
A. ஆப்ரகாம் லிங்கன் B. மார்டின் லூதர் கிங் C. கைலாஷ் சத்தியார்த்தி D. ஒபாமா
E. விடை தெரியவில்லை

45. ஆசாரக்கோவையின் ஆசிரியர் பெயர் (ம) எத்தனை வெண்பாக்களைக் கொண்டது?
A. முன்றுரை அரையனார், 100 B. பெருவாயின் முள்ளியார், 108
C. முன்றுரை அரையனார், 110 D. பெருவாயின் முள்ளியார், 100 E. விடை தெரியவில்லை

46. மகரசங்கராந்தி கொண்டாடப்படும் மாநிலங்களில் அல்லாதவை எவை?
A. ஆந்திரா B. மகாராஷ்டிரா C. உத்திரப்பிரதேசம் D. இராஜஸ்தான் E. விடை தெரியவில்லை

47. எளிய தமிழில் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடியவர்?
A. உடுமலை நாராயண கவி B. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் C. மருதகாசி D. பாரதியார்
E. விடை தெரியவில்லை

48. ஏவல் வினைமுற்று தொடர்புடைய கீழ்கண்ட கூற்றில் சரியானது எது?
1. முன்னிலையில் வரும்.
2. ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை.
3. விகுதி பெறாமல் மட்டும் வரும்.
4. கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும்.
A. கூற்று 1, 2 மட்டும் சரி B. கூற்று 3, 4 மட்டும் சரி C. கூற்று 2, 3 மட்டும் சரி
D. கூற்று 1, 4 மட்டும் சரி E. விடை தெரியவில்லை

49. கும்மிப் பாடல்கள் பற்றிய சரியான கூற்றுகள் எவை?
   1. நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில், மக்கள் பட்ட துயரங்களை அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் கும்மிப் பாடல்களாகப் பாடினர்.
   2. பேச்சுத் தமிழில் அமைந்த இவை பஞ்சக்கும்மிகள் என்று அழைக்கப்பட்டன.
   3. புலவர் செ.இராசு பஞ்சக்கும்மிகள் என்ற நூலைத் தொகுத்தார்.

   A. கூற்று 1, 3 மட்டும் சரி B. கூற்று 1, 2 மட்டும் சரி C. கூற்று 2, 3 மட்டும் சரி
   D. கூற்று 1, 2, 3 சரி E. விடை தெரியவில்லை

50. கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
   நாவாயும் ஓடா நிலத்து - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி
   A. பிறிது மொழிதல் அணி B. உவமை அணி C. இல்பொருள் உவமை அணி
   D. எடுத்துக்காட்டு உவமை அணி E. விடை தெரியவில்லை

51. “தொல்லை வினைதரு தொல்லை அகன்று
   சுடர்க தமிழ்நாடே!” என்ற பாடல் வரியைப் பாடியவர் யார்?
   A. பாரதிதாசன் B. பாரதியார் C. து.அரங்கன் D. தொல்காப்பியர் E. விடை தெரியவில்லை

52. குமரகுருபரர் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்?
   A. 9ம் நூற். B. 13ம் நூற். C. 16ம் நூற். D. 17ம் நூற். E. விடை தெரியவில்லை

53. பொருத்துக.
   a. அஞ்சினர் - 1. இரக்கம்
   b. கருணை - 2. உலகம்
   c. ஆகாது - 3. பயந்தனர்
   d. பார் - 4. முடியாது

   A. 3 1 4 2 B. 3 1 2 4 C. 2 3 1 4 D. 3 2 4 1 E. விடை தெரியவில்லை

54. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க. (அம்பேத்கர்)
   1) 1924ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பை நிறுவினார்.
   2) 1923ஆம் ஆண்டு ரூபாய் பற்றிய பிரச்சனை என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைக்காக முனைவர் பட்டம் பெற்றார்.

   A. 1, 2 சரி B. 1 மட்டும் சரி C. 2 மட்டும் சரி D. 1, 2 தவறு E. விடை தெரியவில்லை

55. திருநெல்வேலிச் சீமையும் கவிகளும் என்ற கட்டுரை எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?
   A. இதய ஒலி B. அறிக அறிவியல் C. மழை பற்றிய பகிர்தல்கள் D. வீடு முழுக்க வானம்
   E. விடை தெரியவில்லை

56. பின்வரும் கூற்றுகளில் தவறானதைத் தேர்ந்தெடு. (தேசிய விநாயகனார்)
   1. கவிமணி பட்டம் பெற்றவர்.
   2. ஆசிய ஜோதி என்னும் புத்தகம் இலத்தீன் மொழியில் ‘எட்வின் அர்னால்டு’ எழுதிய லைட் ஆ.ஃப் ஆசியா என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்டது.
   3. இது புத்தரின் வரலாற்றைக் கூறுகிறது.

   A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 3 மட்டும் D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

57. பொருத்துக.
   a. புலி - 1. குருளை
   b. சிங்கம் - 2. பறழ்
   c. யானை - 3. குட்டி
   d. கரடி - 4. கன்று

   A. 1 2 3 4 B. 2 1 4 3 C. 3 4 1 2 D. 4 3 2 1 E. விடை தெரியவில்லை

58. தமிழ் எழுத்துகள் தொடர்பான கூற்றுகளை கவனி?
   1. வட்டெழுத்து என்பது வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழமையான தமிழ் எழுத்து ஆகும்.
   2. சேர, பாண்டிய மண்டலங்களில் எட்டாம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கிடைத்த சாசனங்களில் வட்டெழுத்துகளே இடம்பெற்றுள்ளன.
   3. முதலாம் இராசராசசோழனின் ஆட்சிக்காலமான பதினொன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகு கிடைத்த கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துகள் காணப்படுகின்றன.

A. கூற்று 1, 2 மட்டும் சரி B. கூற்று 2, 3 மட்டும் சரி C. கூற்று 1, 3 மட்டும் சரி
D. கூற்று 1, 2, 3 சரி E. விடை தெரியவில்லை

59. 'செந்தமிழே செங்கரும்பே செந்தமிழர் சீர்காக்கும்
நந்தா விளக்கனைய நாயகியே' - என்ற பாடல் வரிகள் யாருடையது?
A. து.அரங்கன் B. பாரதியார் C. வே.அரங்கசாமி D. செ.இராசு E. விடை தெரியவில்லை

60. 'நாடென்ப நாடா வளத்தன்ன நாடல்ல
நாட வளம்தரும் நாடு' - இக்குறட்பாவில் வள்ளுவர் சிறந்த நாடு என்று எவற்றைக் குறிப்பிடுகின்றார்?
A. முயற்சி செய்து சேரும் வளத்தை உடைய நாடு.
B. தெளிந்த நீரும், நிலமும், மலையும், காடும் உடைய நாடு.
C. சிறந்த நெறிகளை உடையவரைக் கொண்ட நாடு.
D. பெரிய நெறிகளை உடையவரைக் கொண்ட நாடு.
E. விடை தெரியவில்லை

61. சுமார் ஆயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முன் "நுண் துளி தூங்கும் குற்றாலம்" என்று பாடியவர் ...............
A. திருநாவுக்கரசர் B. திருஞானசம்பந்தர் C. திரிகூடராசப்பக் கவிராயர் D. அருணகிரிநாதர்
E. விடை தெரியவில்லை

62. பொருத்துக.
a. பண்டம் - 1. Commodity
b. பயணப்படகுகள் - 2. Ferries
c. பாரம்பரியம் - 3. Heritage
d. நுகர்வோர் - 4. Consumer
A. 1 2 3 4 B. 3 2 1 4 C. 2 3 1 4 D. 1 2 4 3 E. விடை தெரியவில்லை

63. தவறானதைத் தேர்ந்தெடு.
A. கதிர்ச்சுடர் - கதிரவன் ஒளி B. மின்னல் வரி - மின்னல் கோடுகள்
C. அரிச்சுவடி - அகரவரிசை எழுத்துக்கள் D. எதுவுமில்லை
E. விடை தெரியவில்லை

64. தமிழில் 'சொல்' என்பதற்கு .......................... என்பது பொருள்
A. ஈக B. நொ C. நெல் D. கோன் E. விடை தெரியவில்லை

65. பொருத்துக: (பிறக்கும் இடம்)
a. உயிர் எழுத்துகள் - 1. மார்பு
b. வல்லின மெய் எழுத்துகள் - 2. தலை
c. மெல்லின மெய் எழுத்துகள் - 3. கழுத்து
d. ஆய்த எழுத்து - 4. மூக்கு
A. 1 2 3 4 B. 2 1 4 3 C. 3 1 4 2 D. 4 3 2 1 E. விடை தெரியவில்லை

66. எந்த மாவட்டத்தில் பாவாணர் நூலகம் அமைந்துள்ளது?
A. மதுரை B. திருச்சி C. கோவை D. தஞ்சாவூர் E. விடை தெரியவில்லை

67. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானது?
A. ஆசிரியப்பா அகவலோசை உடையது.
B. சங்க இலக்கியங்கள் பலவும் வெண்பாவால் அமைந்தவை.
C. குறில் அல்லது நெடில் எழுத்து, தனித்து வந்தாலும் ஒன்றுடன் சேர்ந்து வந்தாலும் நேரசையாகும்.
D. ஓர் அசையோ ஒன்றுக்கு மேற்பட்ட அசைகளோ சேர்ந்து அமைவது சீர்.
E. விடை தெரியவில்லை

68. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.
1. முற்காலத்தில் திருநெல்வேலிக்கு வேணுவனம் என்னும் பெயரும் இருந்துள்ளது.
2. வேணுவனம் என்பதன் பெயர் மூங்கில் காடு.
3. சம்பா நெல் அதிகமாக விளைந்தமையால் அப்பகுதிக்கு நெல்வேலி என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.
A. கூற்று 1, 2, 3 சரி B. கூற்று 1, 2 சரி 3 தவறு C. கூற்று 1 தவறு, 2, 3 சரி
D. கூற்று 1, 2 தவறு 3 சரி E. விடை தெரியவில்லை

69. கீழே கூறிய கூற்றுகளுக்குப் பொருத்தமானவரைத் தேர்ந்தெடு.
1) தமிழாசிரியராகப் பணியாற்றியவர்.
2) வானம்பாடி, குயில், தென்றல் போன்ற இதழ்களில் கவிதை எழுதியவர்.
3) இவரது கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள் எள்ளல் சுவையோடு வெளிப்படும்.
A. வரதன் B. பாரதிதாசன் C. தேனரசன் D. முடியரசன் E. விடை தெரியவில்லை

70. பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய நூல்களை இயற்றியவர்
A. பெருங்கௌசிகனார் B. கபிலர் C. கடியலூர் உருத்திரங்கண்ணனார் D. நல்லூர் நத்தத்தனார்
E. விடை தெரியவில்லை

71. பொருத்துக. (ஆங்கிலச் சொல் - தமிழ்ச்சொல்)
a. கரன்சி நோட் - 1. வங்கி
b. பேங்க் - 2. ரூபாய் தாள்
c. செக் - 3. வரைவு ஓலை
d. டிமாண்ட் டிராப்ட் - 4. காசோலை
A. 1 2 3 4 B. 2 1 4 3 C. 3 2 4 1 D. 1 2 4 3 E. விடை தெரியவில்லை

72. ‘எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே’ என்பது யாருடைய மொழி?
A. தொல்காப்பியர் B. திருவள்ளுவர் C. பவணந்தி முனிவர் D. பாவாணர்
E. விடை தெரியவில்லை

73. கூற்று 1 : கல்வெட்டுகளில் ‘ஸ’ என்னும் தமிழ் எழுத்து காணப்படுகிறது.
கூற்று 2 : கல்வெட்டுகளில் எகர, ஒகரக் குறில் நெடில் வேறுபாடில்லை.
A. கூற்று 1, 2 சரி B. கூற்று 1, 2 தவறு C. கூற்று 1 சரி 2 தவறு D. கூற்று 1 தவறு, 2 சரி
E. விடை தெரியவில்லை

74. சிந்துக்குத் தந்தை என்று பாரதியாரைப் புகழ்ந்தவர் யார்?
A. பெரியார் B. ராஜாஜி C. காந்தி D. பாரதிதாசன் E. விடை தெரியவில்லை

75. எழுத்துகளின் பிறப்பினை .............. வகையாகப் பிரிப்பர்.
A. இரண்டு B. மூன்று C. நான்கு D. ஐந்து E. விடை தெரியவில்லை

76. குணங்குடி மஸ்தான் சாகிபுவின் இயற்பெயர் என்ன?
A. சுல்தான் அப்துல் ரஷீத் B. சுல்தான் அப்துல் சாகிப்
C. சுல்தான் அப்துல் வாகிப் D. சுல்தான் அப்துல் காதர் E. விடை தெரியவில்லை

77. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க.
1) சிறுகதை மன்னன் என்று போற்றப்படுபவர் சொ.விருத்தாசலம்.
2) மனித யந்திரம் எனும் சிறுகதை ‘எழுத்து’ என்னும் இதழில் வெளியானது.
A. 1, 2 சரி B. 1 மட்டும் சரி C. 2 மட்டும் சரி D. 1, 2 தவறு E. விடை தெரியவில்லை

78. சரியானதைத் தேர்ந்தெடு.
1. உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம் - புறநானூறு.
2. கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஉய் - மணிமேகலை.
3. நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக - அகநானூறு
A. 1 மட்டும் சரி B. 2 மட்டும் சரி C. 3 மட்டும் சரி D. அனைத்தும் சரி E. விடை தெரியவில்லை

79. பொருத்துக.
a. அழுக்காறு - 1. பேராசை
b. அவா - 2. பொறாமை
c. வெகுளி - 3. கடுஞ்சொல்
d. இன்னாச்சொல் - 4. சினம்
A. 1 2 3 4 B. 2 1 4 3 C. 2 1 3 4 D. 3 1 2 4 E. விடை தெரியவில்லை

80. பின்வரும் கூற்றுகளை ஆராய்க.
கூற்று 1 : ஆசியஜோதி என்பது ஒரு தழுவல் நூல்.
கூற்று 2 : இதன் மூல நூல் பிரெஞ்சு மொழியில் உள்ளது.
கூற்று 3 : மூல நூலினை எழுதியவர் எட்வின் அர்னால்டு.
A. அனைத்தும் சரி B. அனைத்தும் தவறு C. 2 தவறு D. 1 தவறு E. விடை தெரியவில்லை

81. தமிழகப் பழங்குடிகள் என்னும் நூலை எழுதியவர் யார்?
A. சியாட்டல் B. பக்தவத்சல பாரதி C. பாரதியார் D. மனிஷ் சாண்டி
E. விடை தெரியவில்லை

82. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் .....................
A. வலிமையற்றவர் B. ஒழுக்கமற்றவர் C. கல்லாதவர் D. அன்பில்லாதவர்
E. விடை தெரியவில்லை

83. கூற்று 1 : ஒருவரிடம் ஒன்றை வினவுவதாக அமையும் தொடர் விழைவுத் தொடர் ஆகும்.
கூற்று 2 : ஒரு செய்தியைத் தெளிவாகக் கூறும் தொடர் உணர்ச்சித் தொடர் ஆகும்.
A. கூற்று 1, 2 சரி B. கூற்று 1, 2 தவறு C. கூற்று 1 தவறு, 2 சரி D. கூற்று 1 சரி, 2 தவறு
E. விடை தெரியவில்லை

84. குமரகுருபரரின் நீதிநெறி விளக்கம் எத்தனை வெண்பாக்களை உடையது?
A. 81 B. 98 C. 102 D. 100 E. விடை தெரியவில்லை

85. புகழாலும் பழியாலும் அறியப்படுவது எது?
A. அடக்கமுடைமை B. நாணுடைமை C. நடுவு நிலைமை D. பொருளுடைமை
E. விடை தெரியவில்லை

86. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க.
1) பகைவரை எதிர்த்து நிற்கும் வீரத்தை ஆண்மை என்று கூறுவர்.
2) பகைவருக்கும் துன்பம் வரும் போது, உதவி செய்தலை ஆண்மையின் கூர்மை என்று கூறுவர்.
A. 1, 2 சரி B. 1 மட்டும் சரி C. 2 மட்டும் சரி D. 1, 2 தவறு E. விடை தெரியவில்லை

87. வள்ளுவர் கோட்டம் பற்றிய கூற்றுகளில் சரியானது?
1) இதன் பணி 1973ல் தொடங்கி 1976ல் முடிக்கப்பட்டது.
2) அறத்துப்பால் செந்நிற பளிங்குக் கல்லில் காணப்படுகிறது.
3) பொருட்பால் வெண்ணிறப் பளிங்குக் கல்லில் காணப்படுகிறது.
4) இன்பத்துப்பால் கருநிறப் பளிங்குக் கல்லில் காணப்படுகிறது.
A. 1, 2 சரி 3, 4 தவறு B. 1, 3 சரி 2, 4 தவறு C. 2, 4 சரி 1, 3 தவறு D. அனைத்தும் சரி
E. விடை தெரியவில்லை

88. பின்வரும் கூற்றுகளைக் கவனி.
கூற்று 1 : 1938ஆம் ஆண்டு மே 12, 13 ஆகிய தேதிகளில் கமுதியில் குற்றப்பரம்பரை சட்ட மாநாட்டை முத்துராமலிங்கர் நடத்தினார்.
கூற்று 2 : குற்றப்பரம்பரைச் சட்டம் 1948ஆம் ஆண்டு நீக்கப்பட்டது.
A. கூற்று 1, 2 சரி B. கூற்று 1 சரி, 2 தவறு C. கூற்று 1 தவறு, 2 சரி D. கூற்று 1, 2 தவறு
E. விடை தெரியவில்லை

89. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. இந்தியா | - | 1. கலைக்கூடம் |
| b. திருக்குறள் | - | 2. கிழக்கு வாசல் |
| c. மெய்யுணர்வு | - | 3. ஆடை |
| d. சிற்பம் | - | 4. மேலாடை |

A. 2 3 4 1 B. 2 4 1 3 C. 2 3 1 4 D. 2 1 4 3 E. விடை தெரியவில்லை

90. "வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல
மற்றவர் மனதில் நீ வாழும் வரை" எனக் கூறியவர்?
A. தாயுமானவர் B. தெரசா C. ஔவையார் D. வள்ளலார் E. விடை தெரியவில்லை

91. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் .................. எனப்படும்.
A. முற்று B. எச்சம் C. முற்றெச்சம் D. வினையெச்சம் E. விடை தெரியவில்லை

92. மின்னணு வாக்கு எந்திரம் உருவாக்கும் பணியில் முக்கியப் பங்கு ஆற்றியவர் யார்?
A. சுஜாதா B. முடியரசன் C. பிச்சமூர்த்தி D. பாரதியார் E. விடை தெரியவில்லை

93. கூற்று 1 : நீலகேசி ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.
கூற்று 2 : நீலகேசி கடவுள் வாழ்த்து நீங்கலாக ஐந்து சருக்கங்களைக் கொண்டது.
A. கூற்று 1, 2 சரி B. கூற்று 1, 2 தவறு C. கூற்று 1 தவறு, 2 சரி D. கூற்று 1 சரி, 2 தவறு
E. விடை தெரியவில்லை

94. பொருந்தாதது எது?
A. மட்டு - அளவு B. வையம் - உலகம் C. சுண்ட - நான்கு D. திட்டுமுட்டு - தடுமாற்றம்
E. விடை தெரியவில்லை
95. பின்வரும் கூற்றுகளை ஆராய்க.
கூற்று 1 : புறநானூறு சங்க கால மக்களின் வீரத்தை கருப்பொருளாகக் கொண்டு பாடப்பட்டது.
கூற்று 2 : புறநானூற்றில் காவற்பெண்டு இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார்.
A. கூற்று 1, 2 சரி B. கூற்று 1 சரி, 2 தவறு C. கூற்று 1 தவறு, 2 சரி D. கூற்று 1, 2 தவறு
E. விடை தெரியவில்லை
96. கொள்வதும் மிகை கொளாது
கொடுப்பதும் குறையாது - என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல்?
A. நற்றிணை B. பரிபாடல் C. பட்டினப்பாலை D. குறுந்தொகை E. விடை தெரியவில்லை
97. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.
1. பசும்பொன்னில் உள்ள முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் அவர் தோன்றி மறைந்த அக்டோபர் 30 ஆண்டுதோறும் தமிழக அரசின் சார்பில் அரசு விழா எடுக்கப்படுகிறது.
2. சென்னையில் அரசு சார்பாக சிலை அமைக்கப்பட்டுள்ளது.
3. தமிழக சட்டமன்றத்தில் இவரது திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
A. கூற்று 1, 2, 3 சரி B. கூற்று 1, 2 சரி 3 தவறு C. கூற்று 1 தவறு 2, 3 சரி
D. கூற்று 1, 2 தவறு 3 சரி E. விடை தெரியவில்லை
98. நோயின் தன்மை எத்தனை வகை என்று நீலகேசி குறிப்பிடுகிறது?
A. 2 B. 3 C. 4 D. 5 E. விடை தெரியவில்லை
99. ஆலங்குடி சோமு தமிழ்நாடு அரசின் எந்த விருதினைப் பெற்றுள்ளார்?
A. அப்துல்கலாம் விருது B. தமிழ்த்தாய் விருது C. பாவேந்தர் பாரதிதாசன் விருது
D. கலைமாமணி விருது E. விடை தெரியவில்லை
100. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.
1. திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி - சேக்கிழார்.
2. தண்பொருநைப் புனல் நாடு - திருஞான சம்பந்தர்.
3. திருநெல்வேலிப் பகுதியை வளம் செழிக்கச் செய்யும் ஆறு - தாமிரபரணி
A. கூற்று 1, 2, 3 சரி B. கூற்று 1 தவறு, 2, 3 சரி C. கூற்று 1 சரி, 2, 3 தவறு
D. கூற்று 1, 2 தவறு, 3 சரி E. விடை தெரியவில்லை
101. ஆண்டொன்றுக்கு 5 சதவிகிதம் என்னும் தனிவட்டி விகிதத்தில் முதலீடு செய்யப்படும் தொகையின் மதிப்பானது எத்தனை ஆண்டுகளில் 40% அதிகரிக்கும்.
A. 5 B. 6 C. 7 D. 8 E. விடை தெரியவில்லை
102. 6% வட்டியில் 3 ஆண்டுகளுக்கு ஒரு தொகையின் தனிவட்டி ரூ.90 எனில் அதே தொகைக்கு 6 ஆண்டுகளுக்கு 7% வட்டி விகிதம் எனில் தனிவட்டி எவ்வளவு?
A. 90 B. 210 C. 270 D. 180 E. விடை தெரியவில்லை
103. ஒரு செப்புக் கம்பி 81 செ.மீ-ஐ பரப்பளவாகக் கொண்ட ஒரு சதுர வடிவத்தில் வளைக்கப்படுகிறது. அந்தக் கம்பி ஒரு அரைவட்ட வடிவத்தில் வளைக்கப்படுவதாக இருந்தால், அந்த அரை வட்டத்தின் ஆரம் எத்தனை செ.மீ?
A. 16 B. 14 C. 10 D. 7 E. விடை தெரியவில்லை
104. 66 செ.மீ, 12 செ.மீ அளவுகள் கொண்ட ஒரு செவ்வக வடிவ மெல்லிய உலோகத் தகட்டினை 12 செ.மீ உயரமுள்ள ஒரு உருளையாக மாற்றினால் கிடைக்கும் உருளையின் கனஅளவைக் காண்க.
A. 6000 $cm^3$ B. 5280 $cm^3$ C. 4158 $cm^3$ D. 5158 $cm^3$ E. விடை தெரியவில்லை
105. கூட்டுவட்டி விகிதத்தில் முதலீடு செய்யப்படும் ஒரு தொகையானது 2 ஆண்டுகளில் 4624 ரூபாயாகவும், 3 ஆண்டுகளில் 4913 ரூபாயாகவும் வளர்ச்சி அடைகின்றது எனில் அசல் தொகை எவ்வளவு?
A. ரூ.4096 B. ரூ.4360 C. ரூ.4335 D. ரூ.4260 E. விடை தெரியவில்லை
106. ஒரு தொகைக்கு அடுத்தடுத்த ஆண்டுகளுக்கு முறையே 10% மற்றும் 12% வட்டி வீதத்தில் ரூ.9,000க்கு 2 ஆண்டுகளுக்கு தொடர் வட்டி எவ்வளவு?
A. ரூ.1188 B. ரூ.2088 C. ரூ.4396 D. ரூ.2596 E. விடை தெரியவில்லை

107. 32 செ.மீ ஆரம் கொண்ட உலோக கோளத்தை உருக்கி 2 செ.மீ ஆரம் கொண்ட சிறிய கோளமாக மாற்றினால் எத்தனை கோளங்கள் கிடைக்கும்?
A. 4096 B. 512 C. 1024 D. 2048 E. விடை தெரியவில்லை

108. தனிவட்டி விகிதத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையானது 3 ஆண்டுகளில் 815 ரூபாயாகவும், 4 ஆண்டுகளில் 854 ரூபாயாகவும் வளர்ச்சி அடைகின்றது எனில் அசல் தொகை எவ்வளவு?
A. ரூ.650 B. ரூ.690 C. ரூ.698 D. ரூ.700 E. விடை தெரியவில்லை

109. தனிவட்டியில் ஒரு குறிப்பிட்ட வட்டிவீதத்தில் அசல் ரூ.1200 ஆனது ரூ.1632 ஆக 4 ஆண்டுகளில் மாறுகிறது. மேலும் வட்டிவீதம் 1% அதிகரிக்கப்பட்டால் கிடைக்கும் மொத்த தொகை எவ்வளவு (ரூபாயில்)
A. 1635 B. 1641 C. 1670 D. 1680 E. விடை தெரியவில்லை

110. ஒரு வீட்டு மனையானது நாற்கர வடிவில் உள்ளது. அதன் ஒரு மூலைவிட்டத்தின் நீளம் 100மீ மூலைவிட்டத்தின் எதிரெதிர் பக்கங்களில் உள்ள முனைகள் இரண்டும் மூலை விட்டத்திலிருந்து 50மீ தொலைவில் இருப்பின், மனையின் பரப்பு யாது?
A. 5000 $மீ^2$ B. 1000 $மீ^2$ C. 10000 $மீ^2$ D. 500 $மீ^2$ E. விடை தெரியவில்லை

111. ஒரு இயந்திரத்தின் மதிப்பு ஒவ்வொரு ஆண்டும் 5% குறைகிறது. ஒருவர் இதை வாங்குவதற்கு ரூ.30,000 கொடுத்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இதன் மதிப்பு என்ன?
A. ரூ.25,721 B. ரூ.25,722 C. ரூ.27,521 D. ரூ.22,752 E. விடை தெரியவில்லை

112. ஒரு சர்க்கஸ் கூடாரமானது 3மீ உயரமுள்ள உருளையின் மீது கூம்பு அமைந்தாற் போன்ற வடிவத்திலுள்ளது. அதன் அடிப்பக்க ஆரம் 52.5மீ, கூம்பின் சாயுயரம் 53மீ எனில், அக்கூடாரம் அமைக்கத் தேவையான கித்தான் துணியின் பரப்பைக் கணக்கிடுக.
A. $315\pi m^2$ B. $3097.5\pi m^2$ C. $2782.5\ \pi m^2$ D. $2997.5\ \pi m^2$ E. விடை தெரியவில்லை

113. ஒரு குறிப்பிட்ட வைப்புத் தொகையானது 15 ஆண்டுகளில் தனிவட்டியில் மூன்று மடங்கானால் அதன் ஆண்டு வட்டி வீதம் காண்க.
A. $12\frac{2}{3}\%$ B. $13\frac{1}{3}\%$ C. $16\frac{2}{3}\%$ D. 20% E. விடை தெரியவில்லை

114. ஒரு குறிப்பிட்ட தொகைக்கு 8 ஆண்டுகளில் கிடைக்கும் தனிவட்டியானது அசலைப் போல் $\frac{1}{5}$ மடங்கு எனில் வட்டி வீதம் காண்க?
A. 2.5% B. 4% C. 8% D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

115. ஒரு சதுரங்க அட்டையில் 64 சமஅளவு சதுரங்கள் உள்ளன. ஒவ்வொரு சதுரத்தின் பரப்பளவு 6.25 ச.செ.மீ அட்டையில் சுற்றிலும் 2 செ.மீ அகலத்திற்கு கரை (board) விடப்பட்டுள்ளது எனில் சதுரங்க அட்டையின் பக்கத்தின் அளவு என்ன?
A. 20 செ.மீ B. 22 செ.மீ C. 24 செ.மீ D. 21 செ.மீ E. விடை தெரியவில்லை

116. கூட்டுவட்டி முறையில் முதலீடு செய்யப்பட்ட ஒரு தொகையானது 10 ஆண்டுகளில் இரட்டிப்பாகிறது எனில் தொடக்க அசலைப் போல் 8 மடங்காக எடுத்துக்கொள்ளும் வருடம் எவ்வளவு?
A. 80 வருடங்கள் B. 40 வருடங்கள் C. 30 வருடங்கள் D. 20 வருடங்கள்
E. விடை தெரியவில்லை

117. அசல் ரூ.1560 ஆனது ஆண்டுக்கு $9\frac{3}{4}\%$ வட்டி வீதத்தில் 6 மாதங்களுக்கு கடனாகப் பெறப்படுகிறது எனில் திருப்பி செலுத்தும் மொத்த தொகை எவ்வளவு? (ரூபாயில்)
A. 1636 B. 1636.05 C. 1600 D. 1500 E. விடை தெரியவில்லை

118. ரூ.10,000க்கு 8% ஆண்டு வட்டி வீதம் எனில், இரண்டு ஆண்டுகளில் கிடைக்கும் கூட்டு வட்டிக்கும், தனிவட்டிக்கும் உள்ள வித்தியாசம்
A. ரூ.64 B. ரூ.68 C. ரூ.70 D. ரூ.72 E. விடை தெரியவில்லை

119. ஒரு நேர்வட்டக் கூம்பு மற்றும் நேர்வட்ட உருளையின் ஆரமும் உயரமும் முறையே சமம். உருளையின் கனஅளவு 120 $செ.மீ^3$ எனில், கூம்பின் கனஅளவு
A. 1200 $செ.மீ^3$ B. 360 $செ.மீ^3$ C. 40 $செ.மீ^3$ D. 90 $செ.மீ^3$ E. விடை தெரியவில்லை

120. 15% ஆண்டு வட்டியில், 3 ஆண்டுகளுக்கு கிடைக்கும் கூட்டுவட்டிக்கும் தனிவட்டிக்கும் இடையேயுள்ள வித்தியாசம் ரூ.1134 எனில், அசலைக் காண்க.
A. ரூ.12000 B. ரூ.19000 C. ரூ.18000 D. ரூ.16000 E. விடை தெரியவில்லை

121. 15000 ரூபாய் மீது 2 ஆண்டுகளுக்கு கிடைக்கும் கூட்டுவட்டி மற்றும் தனிவட்டி தொகைகளுக்கு இடையேயான வேறுபாடு 96 ரூபாய் எனில் ஆண்டொன்றுக்கான வட்டி விகிதம் என்ன?

A. 8% B. 10% C. 2% D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

122. ஒரு தெருவில் நிறுத்தப்பட்டுள்ள 25 அடி நீளமுள்ள ஏணி தரைமட்டத்திலிருந்து 24 அடி உயரமுள்ள சன்னலைத் தொடுகிறது. அடியை மாற்றாமல் அந்த ஏணியை சுழற்ற அத்தெருவின் மறுபக்கத்திலுள்ள சன்னலை 7 அடி உயரத்தில் தொடுகிறது எனில் அத்தெருவின் அகலம்

A. 30 B. 32 C. 29 D. 31 E. விடை தெரியவில்லை

123. அரவிந்த் என்பவர் ரூ.8000 ஐ ஆகாஷிடம், 7% தனிவட்டி வீதத்தில் கடனாகப் பெற்றார். இரண்டு ஆண்டுகள் முடிவில் அவர் செலுத்த வேண்டிய தனிவட்டி, மொத்தத் தொகை

A. 800, 8000 B. 1000, 9000 C. 1120, 9000 D. 1120, 9120 E. விடை தெரியவில்லை

124. ஒரு உள்ளீடற்ற கோளத்தின் கனஅளவு $\frac{11352}{7}$ க.செ.மீ மற்றும் அதன் வெளி ஆரம் 8 செ.மீ எனில் அக்கோளத்தின் உள் ஆரத்தைக் காண்க.

A. 6 செ.மீ B. 5 செ.மீ C. 7 செ.மீ D. 8 செ.மீ E. விடை தெரியவில்லை

125. ஒருவர் அசல் 25,000 ரூபாயை ஆண்டுக்கு கூட்டுவட்டி 4% வீதம் முதலீடு செய்து n ஆண்டுகள் கழித்து ரூ.27,040-ஐ தொகையாகப் பெறுகிறார் எனில் n-ன் மதிப்பு யாது?

A. 2 ஆண்டுகள் B. 3 ஆண்டுகள் C. 2½ ஆண்டுகள் D. 3½ ஆண்டுகள்

E. விடை தெரியவில்லை

# 19th Batch - Answer Key - Test 8

| S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 21 | C | 41 | A | 61 | B | 81 | B | 101 | D | 121 | A |
| 2 | C | 22 | B | 42 | A | 62 | A | 82 | C | 102 | B | 122 | D |
| 3 | C | 23 | B | 43 | C | 63 | D | 83 | B | 103 | D | 123 | D |
| 4 | B | 24 | C | 44 | C | 64 | C | 84 | C | 104 | C | 124 | B |
| 5 | C | 25 | A | 45 | D | 65 | C | 85 | C | 105 | A | 125 | A |
| 6 | A | 26 | A | 46 | D | 66 | B | 86 | A | 106 | B | | |
| 7 | C | 27 | A | 47 | B | 67 | B | 87 | B | 107 | A | | |
| 8 | B | 28 | D | 48 | D | 68 | B | 88 | C | 108 | C | | |
| 9 | C | 29 | A | 49 | D | 69 | C | 89 | A | 109 | D | | |
| 10 | A | 30 | B | 50 | A | 70 | C | 90 | B | 110 | A | | |
| 11 | D | 31 | B | 51 | B | 71 | B | 91 | B | 111 | A | | |
| 12 | D | 32 | A | 52 | D | 72 | A | 92 | A | 112 | B | | |
| 13 | A | 33 | A | 53 | A | 73 | D | 93 | B | 113 | B | | |
| 14 | A | 34 | C | 54 | A | 74 | D | 94 | C | 114 | A | | |
| 15 | A | 35 | D | 55 | A | 75 | A | 95 | B | 115 | C | | |
| 16 | B | 36 | D | 56 | B | 76 | D | 96 | C | 116 | C | | |
| 17 | B | 37 | B | 57 | B | 77 | B | 97 | A | 117 | B | | |
| 18 | A | 38 | C | 58 | D | 78 | B | 98 | B | 118 | A | | |
| 19 | B | 39 | D | 59 | A | 79 | B | 99 | D | 119 | C | | |
| 20 | A | 40 | A | 60 | D | 80 | C | 100 | D | 120 | D | | |